1. **மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் கணினி சேவை (CORE Banking Solutions) செயல்படுத்துதல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான சேவை செய்யும் பொருட்டு, மைய வங்கியியல் கணினி சேவை (CORE Banking Solutions) முறை ரூ.8.80 கோடியில் செயல்படுத்தப்படும்.

2. **புறநகர் பகுதிவாழ் மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சேவை :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, நகரமயமாக்கலின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, சென்னை மற்றும் கோவை மாநகராட்சிகளின் புறநகரங்களில் உள்ள 10 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றப்படும்.

3. **கூட்டுறவு வங்கிகளில் கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்துதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் அனைத்துக்

கிளைகளிலும், நடப்பு ஆண்டில் **ரூ.3.10 கோடி மதிப்பீட்டில்** கண்காணிப்புக் கேமிராக்கள் பொருத்தப்படும்.

4. **கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்குதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, பிற வணிக வங்கிகளுக்கு இணையாக வாடிக்கையாளர்களுக்குச் சேவைபுரியும் வகையில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளின் 100 கிளைகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் நவீனமயமாக்கப்படும்.

5. **மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் கட்டளைகளுக்கிணங்க, மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், நட்டமின்றி ஆதாயத்துடன் விளை பொருட்களை விற்பனைச் செய்வதற்கும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களான தேன், சாமை மற்றும் புளி ஆகியவற்றைப் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் (LAMPS) மூலம் கொள்முதல் செய்து, அவற்றிற்கு பொதுவான வணிக முத்திரையிட்டு, உறையிலிட்டு மலைவாழ் பழங்குடியின மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் விற்பனைச் செய்யப்படும்.

6. **புதிய கூட்டுறவு வங்கிக் கிளைகள் துவக்குதல் மற்றும் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, பெரும்பான்மையான மக்களுக்குச் சேவை புரியும் வகையில், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 25 புதிய கிளைகள் ரூ.5 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும். மேலும், ஏற்கெனவே வாடகை கட்டடங்களில் செயல்பட்டு வரும் 25 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகளுக்கு ரூ.6.25 கோடி மதிப்பீட்டில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும்.

7. **வாழை தார் கனியவைக்கும் நிலையம் அமைத்தல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைப்படி, வாழை விவசாயிகள் ஆதாய விலை பெறும்பொருட்டு, கூட்டுறவுத்துறையில் முதன்முறையாக திருச்சி மாவட்டம், வரதராஜபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் வாழைத்தார் குளிரூட்டிக் கனிய வைக்கும் நிலையம், நபார்டு வங்கியின் கடன் மற்றும் மானிய உதவித் திட்டத்தின் மூலம் ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. **தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குக் கணினிகள் வாங்குவதற்கு நிதியுதவி அளித்தல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி நிருவகித்து வரும் 'இணைப்புச் சங்கங்களின் வளர்ச்சி நிதி'யிலிருந்து தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் வகையில், **1,121** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குத் தலா **ரூ.25,000** வீதம் கணினிகள் வாங்குவதற்கு நிதி உதவி அளிக்கப்படும்.

9. **பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள் அமைத்தல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால், இந்திய எண்ணெய் கழகத்தின் உதவியுடன் கோயம்பேடு வணிக வளாகத்தில் ஒரு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையமும், கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையமும் அமைக்கப்படும்.

**10. உலகக் கூட்டுறவு ஆண்டு 2012 கொண்டாடுதல்.**

ஐக்கிய நாடுகள் சபை, 2012ஆம் ஆண்டினை உலகக் கூட்டுறவு ஆண்டாக அறிவித்துள்ளது. பல்வேறு நாடுகளும் இதனைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றன. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள்படி தமிழகத்தில், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள், மாவட்ட மற்றும் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள், ஓவியப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கியும், கூட்டுறவு கருத்தரங்குகள் மற்றும் 16 இலட்சம் மரக்கன்றுகள் நடும் விழாக்கள் போன்றவை நடத்தியும், சிறந்த கூட்டுறவாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களை கௌரவப்படுத்தும் விதமாக பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்படும்.

**11. கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்.**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, மாநிலத்தில், சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி, மதுரை ஆகிய ஏழு கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்கும் பொருட்டு ரூ.255 இலட்சம் மதிப்பீட்டில் கணினி படிவம் தயாரிக்கும் மற்றும் அச்சடிக்கும் இயந்திரம் அமைக்கப்படும்.

12. **ஆதாய விலையில் உளுந்து கொள்முதல் செய்தல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, விவசாயிகள் ஆதாய விலை பெறும் வகையிலும், அதிக விளைச்சலின் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்பட்டுப் பொருட்களைக் குறைந்த விலையில் விற்பதைத் தவிர்க்கும் பொருட்டும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தால் விவசாயிகளிடமிருந்து உளுந்து நேரடியாகக் கொள்முதல் செய்யப்படும்.

13. **மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மாற்றுத் திறனாளிகளுக்கு **2012–13** ஆம் ஆண்டில் ரூ.**15** கோடி வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

14. **வீட்டு அடமானக் கடனை அதிகரித்து வழங்குதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி,

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் வீட்டு அடமானக் கடன் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சமாக உயர்த்தி வழங்குவதோடு, அதனைத் திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகளாக மாற்றி அமைக்கப்படும்.

15. **நலிவுற்றச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல் :**

பேராசிரியர் வைத்தியநாதன் குழு பரிந்துரைகளின்படி, இந்திய அரசின் நிதி உதவி பெற இயலாத 41 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வணிகத்திறனை மேம்படுத்துவதற்காக **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, சங்கம் ஒன்றுக்கு ரூ.50 இலட்சம் வீதம் 5 விழுக்காடு வட்டி மானியத்தில் சிறப்புக் காசுக் கடனாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக வழங்கப்படும்.

16. **கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்துதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 16

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின், ரொக்கம் மற்றும் நகைகளைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்ட தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.3.30 கோடி நிதி உதவி அளிக்கப்படும். மேலும், 52 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பாதுகாப்பு சாதனங்கள் நிறுவ தலா ரூ.1.33 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.69.16 இலட்சம் நிதி உதவி வழங்கப்படும்.

**17. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குடும்ப நலத்திட்ட நிதி உதவியை உயர்த்துதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால், குடும்ப நலத்திட்டத்தில் தற்போது வழங்கப்படும் ரூ.1.50 இலட்சம் நிதியுதவி ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**18. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை நவீனமயமாக்குதல் :**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, கோவை

சிந்தாமணி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் தலைமையிடத்தில் செயல்பட்டு வரும் சுயசேவைப் பிரிவினை ரூ.40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி அமராவதி கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் பொன்மலை மற்றும் கைலாசபுரம் சுயசேவைப் பிரிவுகளை தலா ரூ.10 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தனியார் நிறுவனங்களுக்கு நிகராக விற்பனையை மேம்படுத்தும் வகையில் நவீனமயமாக்கப்படும்.

**19. நடமாடும் நியாயவிலைக் கடைகள் அமைத்தல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணையின்படி மலைவாழ் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை இடையூறு இல்லாமல் விநியோகம் செய்யும் வகையிலும், மலைப்பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடைகளாகச் செயல்படவும், 10 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு மலைப்பகுதியில் செல்லக் கூடிய சிறப்பு வாகனங்கள், தலா ரூ.5 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் 2012–13ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

**20. ஆதாய விலையில் வேளாண் விளைபொருட்களை வாங்குதல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி**

**அம்மா** அவர்களின் அறிவுரைகள் மற்றும் ஆணைகளின்படி, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான பயறுவகைகள், மிளகாய், வெங்காயம் போன்றவற்றை ஆதாய விலையில் விற்பதற்கும், நட்ட விலையில் ( Distress Sale) விற்பதைத் தவிர்க்கும் பொருட்டும், கூட்டுறவு நிறுவனங்களின் மூலம், அரசு தரும் மானிய விலையில் விவசாயிகளிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் விற்பனைச் செய்யப்படும்.

**21. சென்னையில் மத்தியக் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் அமைத்தல்:**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைகளின்படி, சென்னையில் உள்ள கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடத்தில் மத்திய கூட்டுறவுப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.**6** கோடி மதிப்பீட்டில் **3** அடுக்கு கட்டடம் கட்டடப்படும்.

**********